**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: |
| Preliminary Register : CC.75/2023 | Age : |
| Sessions : | Taluk : |
| Deposition of Witness for : AW/ PW-3 | |
| Name : ரமேஷ், சிறப்பு உதவி ஆய்வாளர் | Religion : |
| Father's/Husband's Name : | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 04.03.2026.**

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 கு.வி.மு.ச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பந்தநல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் சுப்ரமணியன் என்பவர் பணி ஓய்வில் சென்றுவிட்டார். மேற்படி உதவி ஆய்வாளர் சுப்ரமணியன் என்பவருடைய கையெழுத்து மற்றும் கையொப்பம், எனக்கு நன்கு பரிட்சயம். இவ்வழக்கு கோப்பினை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி 17/07/2022ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது விளத்தொட்டி கீழ தெருவில் வசிக்கும் முருகையன் மகன் சிலம்பரசன்

என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அன்றையதினம் காலை 11.00 மணிக்கு பந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 480/2022 ல் சட்டபிரிவுகள் 294(பி), 323, 506(ii) இ.த.ச -வின் கீழ் வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். **(மேற்படி கணினி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. **(மேற்படி புகார் மனு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் அன்றைய தினமே காலை 12.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் இளங்கோவன் மற்றும் சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **( அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் இவ்வழக்கில் சம்பவயிட சாட்சிகளான மனோபாபு, அஜித்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் எதிரிகளை தேடி வந்த நிலையில் 1 மற்றும் 2 வது எதிரிகள் பந்தநல்லூர் ஐங்கரன் டீக்கடை அருகே நின்று கொண்டிருந்தவர்களை குற்ற காரணம் கூறி 16.00 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 3 வது எதிரி மாண்புமிகு தஞ்சாவூர் மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்.4062/2022 ல் ஏற்பட்டுள்ள உத்தரவின் படி முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரணடைந்து உரிய பிணையில் வெளிவந்தது தெரிய வந்ததால் அவரை இவ்வழக்கில் கைது செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு ஆஜர் எதிரிகளுக்கு எதிராக 30.08.2022 ந் தேதி சட்ட பிரிவுகள் 294(பி), 323, 506(ii) இ.த.ச-வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட விவரங்களை நான்

ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியமாக சொல்லியுள்ளேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். ஆவணங்கள் அடிப்படையில் மட்டுமே சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல், காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்து, எதிரிகள் மீது பொய்யாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை.</u>** இல்லை

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர் (FAC).**